**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.110/2010**

**<u>தேதி : 28.01.2025</u>**

**<u>(வா.சா.1) – திரு. பூவேந்தன்</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (2, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

1. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லித் தான் தயார் செய்தது என்றால் சரிதான். நான் பழனி சட்டமன்றத் தொகுதியில் 1996 முதல் 2001 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன் என்றும், அப்போது தி.மு.க. சார்பில் தேர்தலில் போட்டியிட்டேன் என்றும் சொன்னால் சரிதான். ஓய்வூதியம் வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். தற்சமயம் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துவிட்டேன் என்றால் சரிதான். இதற்கு முன்பாக மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் பழனி சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தியது கிடையாது. என்னுடைய மொத்த சொத்துக்களின் மதிப்பு அதிகபட்சமாக 4 கோடிகள் இருக்கலாம்.

2. எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டில் தான் இருக்கிறார். எனக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளார்கள். மகன் B.E., முடித்துவிட்டு டெல்லியில் இருக்கிறார். மகள் மதுரையில் கனரா வங்கியில் வேலை பார்க்கிறார். வழக்கு சொத்துக்கு அருகில் புல எண்.930/1ஏ, 930/2ஏ–ல் 1.31 ஹெக்டேர் நிலம் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கும், இந்த சொத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டு சொத்துக்களின் பொழி ஒட்டி அமைந்துள்ளது. மேற்படி சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சென்னியப்பத்தேவரிடமிருந்து 2004 ஆம் ஆண்டு கிரையம் வாங்கினேன். வழக்குச் சொத்தின் சர்வே எண்.930/1ஏ.

3. தாவா சொத்து பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்து 1-ம் பிரதிவாதி சக்திவேலுக்கு 27.03.2006 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினையின்படி பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் 10-வது அயிட்டமாக தாவா சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தையும் சோழவந்தானைச் சேர்ந்த கந்தவலியான் அவர்களின் மகன் ரவி என்பவர் 08.06.2016 ஆம் தேதியன்று கிரையம் பெறப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்துக்களை தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக எந்த ஆவணமாக இருந்தாலும் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி சக்திவேல் இறப்பதற்கு முன்பாக 10.09.2006 ஆம் தேதியன்று உயில் சாசனம் எழுதிவைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 27.03.2006 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினைக்கு முன்பாக 2-ம் பிரதிவாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் 1995 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது.

5. 1-ம் பிரதிவாதிக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் மகளாக 3-ம் பிரதிவாதி 24.11.1997 அன்று பிறந்தார் என்றும், 4-ம் பிரதிவாதி 29.01.2005 அன்று பிறந்தார் என்றும் சொன்னால் சரிதான். எந்த தேதியில் நான் ஒப்பந்தம் செய்தேன் என்றால் 29.11.2006 அன்று கிரைய ஒப்பந்தம் செய்தோம். ரூ.50,000/- முன்பணமாகக் கொடுத்துள்ளேன். மேற்படி தொகையை கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் 1-ம் பிரதிவாதி மட்டும்

வந்தார். உடன் கிருஷ்ணசாமி என்பவரும், ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த ஒருவரும் உடனிருந்தார்கள். அவரை மணி என்று அழைப்போம். வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டில் வேறு யாரும் இல்லை என்றால் அப்போதைக்கு இல்லை. ரூ.50,000/– 1–ம் பிரதிவாதி வாங்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.30 மணி இருக்கும். மேற்படி தொகையைத் தவிர அந்த தேதியில் வேறு தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அன்றைக்கு மேற்படி தொகையை வாங்கிக்கொண்டு எனக்கு என்ன எழுதிக்கொடுத்தார் என்றால் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. அந்த தேதியில் எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி விபரங்களை அசல் வழக்கின் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள முத்திரைத் தாளை S. சண்முகவேலு என்ற முத்திரைத்தாள் விற்பனையாளரிடமிருந்து 29.11.2006 அன்று வாங்கினேன் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை செய்தது 38 நாட்கள் கழித்து தான் 05.01.2007 அன்று தான் ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் 2006 என்று இருப்பதை 2007 என திருத்தம் செய்ததற்கு விபரங்கள் முத்திரைத் தாளில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 2–வது பக்கத்தில் பணம் ரூ.1,00,000/– பெற்றுக்கொண்டேன் என்றும் சொல்லப்பட்டது என்றால் சரிதான். யார் யாருக்கு பணம் கொடுத்தது, யார் முன்னிலையில் கொடுத்தது என்ற விபரம் முத்திரைத்தாளில் குறிப்பிடப்படவில்லை என்றால் 1–ம் பிரதிவாதி தான் அதனை எழுதி தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்.

7. மேற்படி கிரைய உடன்படிக்கையில் உள்ள செல் ரசீதிற்கு சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். செல் ரசீது பின்புறத்தில் என்னுடைய கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். சொத்து விபரம் 3–ம்

பக்கத்தில் எழுதிக்கொடுப்பவர் என்ற இடத்தில் சக்திவேலின் கையொப்பம் இல்லை என்றால் இல்லை. 3—ம் பக்கத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் அவர்களது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய உடன்படிக்கையில் உள்ள முதல் பக்கத்தில் உள்ள சக்திவேலின் கையொப்பத்திற்கும், 2—ம் பக்கத்தில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் தெரியாது.

8. கிரைய உடன்படிக்கையில் முத்திரைத்தாளுக்கு அடுத்து உள்ள 2—ம் பக்கத்தில் கையொப்பமிட்டிருப்பவரின் பெயர் மற்றும் முகவரி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் சக்திவேலின் முகவரி ஒட்டன்சத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய உடன்படிக்கையை எப்போது, எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் ஜெயராமன் தான் அதனை தயார் செய்தார். அவருக்கு தான் முழு விபரங்கள் தெரியும். எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் ஜெயராமனின் மூத்த வழக்கறிஞர் சின்னச்சாமி அவர்களின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் 1—ம் பிரதிவாதி சக்திவேல், வழக்கறிஞர் ஜெயராமன், வழக்கறிஞர் சின்னச்சாமி, சக்திவேலின் உதவியாளர் கிருஷ்ணசாமி என்பவரும், கார் ஓட்டுனர் ஒருவரும் இருந்தனர். வேறு யாரும் இருந்தார்களா என்றால் என்னுடன் வேறு யாரும் இல்லை.

9. கிரைய உடன்படிக்கை 2—ம் பக்கத்தில் ரூ.50,000/—ஐ எந்த தேதியில் கொடுத்தேன் என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்தை மோசடி செய்து சொத்தை அபகரிக்க கிரைய ஒப்பந்தத்தை உருவாக்கியதாகச் சொன்னால் சரியல்ல. 2, 4, 5 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் 08.06.2016 அன்று ரவி என்பவர்

கிரையம் வாங்கி அவருடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்ற விபரம் தெரியுமா என்றால் படித்து பார்த்தபிறகு தான் தெரியும். வழக்குச் சொத்தின் பட்டா, கிஸ்தி ரசீது ரவி பெயரில் தான் இருந்து வருகிறது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

10. 2, 4 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி 1–ம் பிரதிவாதியால் கிரைய உடன்படிக்கையில் சரத்துக்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்துக்கள் மாறுபட்டிருக்கிறது என்றும், அதனால் கிரைய உடன்படிக்கையை தடயவியல் ஆய்வுக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 08.06.2016 அன்று கிரையப் பத்திரம் ஏற்படும்போது வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்றால் எனக்கு அந்த விபரம் எதுவும் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து சம்மந்தமாக வில்லங்கம் பெற்றுப் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11. நான், கிரைய உடன்படிக்கையில் உள்ள சாட்சிகள், தயாரித்தவர் ஆகியோர் சேர்ந்து சக்திவேலின் கையொப்பத்தை மோசடி செய்தோம் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை மோசடியாக உற்பத்தி செய்தது என்றும், அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சக்திவேல் அந்த தேதியில் எனக்கு எந்தவிதமான கையொப்பமும் செய்யவில்லை என்றும், வழக்குச் சொத்தை அபகரிப்பதற்காக தாவா கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்தினேன் என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.28 19:06:29 +0530